06.08.2025.

M.C.01/2019,

எ.ம.சா.1, முரளி, த/பெ.மணி,

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

எனது சொந்த ஊர் சென்னை பூந்தமல்லி என்றால் சரிதான். எனக்குசொந்தமாக வீடு உள்ளதா என்றால் என் பெயரில் இல்லை. என் தகப்பனார் பெயரில் உள்ளது. என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பூந்தமல்லி பணிமனை கிளையில் நடத்துனராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் நிரந்தர பணியாளர் என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் கடந்த 02.07.2010ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது திருமணத்தின் பயனாக எங்களுக்கு 2 பெண் குழந்தைகள்1) பூர்ணிமா, வயது.12, 2) பிரிஷா, வயது.11 உள்ளார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் மனுதாரரும் சுமார் 8 ஆண்டுகள் சந்தோஷமாக வாழ்ந்தோம். நான் சொல்வதுபோல் 8 ஆண்டுகள் சந்தோஷமாக வாழவில்லை என்றாலும் அந்த காலகட்டத்தில் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு ஊரில் பஞ்சாயத்து செய்தோம் என்றால் சரியல்ல. நானும் மனுதாரரும் தனிக்குடித்தனமாக சென்னிர்க்குப்பத்தில் 3 மாதங்கள் குடியிருந்து வந்தோம். ஏன் தனிகுடித்தனமாக சென்றோம் என்றால் சந்தேகத்தின்பேரில் சென்றோம்.

எனது தாயார் மனுதாரரை கிருஸ்துவ மதத்திற்கு மதம் மாற கட்டாயப்படுத்தினார் என்றால் தவறு. நான் எனது குழந்தைகளுக்காக தலா ரூ.3,20,000/-ம் செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளது தவறான சங்கதி என்றால் சரியல்ல. நான் எனது சம்பள பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சரிவர பணிக்கு செல்லாமல் குடிபோதையில் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது தற்போதைய சம்பளம் எவ்வளவு என்றால ரூ.5000/-ம் பெற்றுவருகிறேன நான சரிவர பணிக்கு செல்லாததால்தான குறைந்த சம்பளம் பெற்றுவருகிறேன் என்றால் எனக்கு மன உளைச்சலினால் பணிக்கு செல்ல முடியவில்லை. நான் தற்போது பூந்தமல்லியில் நானும் என் தாயாரும் தனித்தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது பெற்றோருக்கு ஒரே மகன் ஆவேன். எனக்கு வீட்டு வாடகை மற்றும் கடை வாடகைமூலம் மாதம் ரூ.1,00,000/. வருகிறது என்றால் சரியல்ல. ரூ.15,000/- முதல் ரூ.18,000/-ம் வரை வருகிறது. அந்த வாடகை எனது தாயார்தான் பெற்று வருகிறார்.

எனக்கும் மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு எனக்கு எதிராக 2018ம் ஆண்டு மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் குடித்துவிட்டு வந்து சந்தேகத்தின்பேரில் மனுதாரரிடம் தகராறு செய்ததால்தான் எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது சொத்து சம்மந்தமாக பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு திருமணத்தின்போது செய்த 20 சவரன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்களை நான் விற்று செலவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எடுத்துச்சென்றுவிட்டார். நான் அடிக்கடி தற்கொலை செய்துகொள்வதாக மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய குடிபோதை மற்றும் சந்தேகத்தின் காரணமாக

மனுதாரர் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாததால் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரர் 2018ம் ஆண்டு முதல் குழந்தைகளுடன் தனியாகத்தான் வாழ்ந்து வருகிறாா் என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ அழைத்தும் மனுதாரர் சேர்ந்து வாழ வரவில்லை. மனுதாரர்களுக்கு அவர் கோரியபடி ஜீவனாம்சம் கொடுக்க நான் கடமைபட்டவன் என்றால் சரியல்ல.